பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. [illegible]

மலர்: 19] சென்னை: கார்த்திகை 11 (27—11—71) சனி வெளியூர்: கார்த்திகை 12 (28—11—71) ஞாயிறு [இதழ்: 138

திசை திருப்பும் முயற்சியில் ஏற்பட்ட தோல்வி

யாகியாகான் மிரட்டலின் உண்மை நிலை என்ன?

புதுடில்லி, நவ. 27—

பிரச்சினைகளைத் திசை திருப்ப முயலும் யாகியா கானின் நட்புறவுக் கோரிக்கையை இந்தியா நிராகரித்ததுதான் நேற்று யாகியா கான் போர் மிரட்டல் செய்து பேசியதற்குக் காரணமாகும் என்று இங்கு கருதப்படுகிறது.

யாகியா கானின் சமாதானக் கோரிக்கை, வங்க தேச விடுதலை வீரர்களைப் புறக்கணிக்கும் வகையில் இருந்ததாகவும், அதனால்தான் இந்தியா அதனை நிராகரித்ததாகவும் தெரியவருகிறது.

யாகியா கானின் கடிதத்தைக் கொண்டுவந்த இந்தியத் தூதுவர் அதால், தலைமையமைச்சருடன் கலந்து பேசி பாகிஸ்தானுக்குத் திரும்பிவிட்டார்.

யாகியா கானின் யோசனைகள் சிறிதளவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்று கூறப்படுகிறது.

மேலும், நேற்று யாகியா கான் பேசிய பேச்சின் தோரணை, ஏற்கனவே விடுக்கப்பட்ட 'ஈத்' செய்திக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

கடிதத்தின் விவரங்கள் குறித்து அதிகாரிகள் ஏதும் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

தமிழகத்தைப் பின்பற்றி ஆந்திரம்

ஐதராபாத், நவ. 27—

"கல்லூரிகளில் தெலுங்கைப் பயிற்சி மொழியாகக்கொண்டு படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வகை செய்யும் விதத்தில் ஆந்திர அரசு விரைவில் உத்தரவு பிறப்பிக்கும்"

என்று, முதலமைச்சர் நரசிம்மராவ், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

சில நிர்வாகக் காரணங்களால் கடந்த இரண்டு மாதங்களாக இந்த உத்தரவு வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

ரூ. 7,809 கடன்

வெளிநாடுகளிடமிருந்து இந்தியா வாங்கியிருக்கிறது

புதுடில்லி, நவ. 27—

வெளிநாடுகளிடமிருந்து இந்தியா ரூ. 7,809 கோடி கடன் வாங்கியிருக்கிறது; இதில் இந்த ஆண்டு ரூ. 469 கோடியும், அடுத்த ஆண்டு ரூ. 472 கோடியும் திரும்பச் செலுத்தப்படும்.

இத்தகவலை, நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் சவான் தெரிவித்தார்.

மேயர் - துணை மேயர் தேர்தல்

நவ. 29-ல் நடைபெறும்

சென்னை, நவ. 27—

சென்னை மாநகராட்சிமன்றத்தின் புதிய மேயர் தேர்தல், 29-11-71 மாலை 4-45 மணிக்குக் கூடும் மாநகராட்சிமன்றச் சாதாரணக் கூட்டத்தில் நடைபெறும்.

மாநகராட்சி கடைப்பிடித்து வரும் மரபுப்படி, இந்த முறை பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இதனையொட்டி, நேற்று மாலை 3-30 மணிக்கு, பிராமண உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றை மேயர் சா. கணேசன் கூட்டியிருந்தார்; இந்தக் கூட்டத்தில், மேயர் தேர்தலுக்கான மரபு விதியை மேயர் படித்துக் காண்பித்தார்.

கூட்டத்தில் திரு. வி. தேவநாதன் (சுதந்), பி. டி. பட்சிராசகோபாலன் (தமிழரசுக் கழகம்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேயர் பதவிக்கான வேட்பாளர் பெயரை முன்மொழியுமாறு மேயர் கேட்டுக்கொண்டார்.

கூடியிருந்த உறுப்பினர்களில் எவரும் பெயர்களை அறிவிக்கவில்லை.

மாநகராட்சி தி. மு. க. கட்சித் தலைவர் திரு. வி. முனுசாமி, தமது கட்சி வேட்பாளர் பெயரை 29—11—71 அன்று நடைபெறும் மன்றக் கூட்டத்தில் அறிவிப்பதாகக் கூறினார்; திரு. பி. தேவநாதனும் அவ்விதமே கூறினார்.

"எனவே, 29—11—71 அன்று மாலை 3 30 மணிக்கு அதிகாரச் சார்பற்ற கூட்டம் நடைபெறுது; மாலை 4-45 மணிக்குக் கூடும் சாதாரணக் கூட்டத்திலேயே மேயர் தேர்தல் நடைபெறும்" என்று மேயர் அறிவித்துள்ளார்.

யாகியா கான் புலம்பல்

'பத்து நாட்களில்'போர்'என மிரட்டல்

தலைமையமைச்சர் இந்திராமீது பாய்ச்சல்

இராவல்பிண்டி, நவ. 27—

இன்னும் பத்துநாட்களில் போர் மூளும் என்று அதிபர் யாகியா கான் நேற்று சீனத் தூதுக் குழுவுக்கு அளித்த விருந்து ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் கூறியிருக்கிறார்.

இந்த விருந்தில் யாகியா கான் திடீரெனக் கலந்துகொண்டார்; தமது பேச்சைக்கூட அவர் முன்கூட்டியே தயார் செய்யாமல்தான் பேசியிருக்கிறார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தப் பத்து நாட்களுக்கு என்னை இங்கே பார்க்க முடியாது; ஏனெனில், நான் போர்க் களத்தில் போராடிக் கொண்டிருப்பேன்.

"ஈத் விழாவையொட்டி நான் விடுத்த நட்புக் கோரிக்கையை இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி நிராகரித்திருக்கிறார்; அந்தப் பெண்மணி நான் மண்டியிட வேண்டுமென்று விரும்புகிறார்; ஆனால் நான் அதற்கு இணங்க மறுத்து வருகிறேன்; நிலைமை மிகவும் மோசமாகிவிட்டிருக்கிறது.

"இந்திரா காந்தி போரை விரும்பினால், நானும் அதற்குத் தயாராக இருக்கிறேன்.

சிவில் நிர்வாகத்தை நிறுவுவது நிச்சயம்

"ஏற்கனவே நான் அறிவித்திருந்தபடி, சிவில் நிர்வாகத்தை நிறுவப்போவது நிச்சயம். தேசியச் சட்டமன்றம் டிசம்பர் 20-ம் நாள் கூடவிருக்கிறது."

சீனு -- பாகிஸ்தான் நட்புறவு

"பாகிஸ்தானுக்குச் சீனு எப்போதும் ஆதரவு அளித்து வரும்; இந்த நட்புறவு காலத்தை வென்றுவிடும் என நினைக்கிறேன்; எந்த எதிரியாலும் இந்த நட்புறவைச் சிதைத்துவிட முடியாது"

என்று சீனத் தூதுக் குழுத் தலைவர் லீ -- சுச்சிங் கூறினார்.

உடனே, சீன உறுதிமொழியைச் சுட்டிக்காட்டி யாகியா கான் கேலியாகக் கூறியதாவது:—

"இதனை உரக்கவும் தெளிவாகவும் கூறுங்கள்; எதிரிகள் அதைக் கேட்டு, 'நாம் எப்போதுமே நண்பர்கள்தான்' என்பதை அறியட்டும். இது அவர்களுக்குச் சங்கடமாகத்தான் இருக்கும்."

நியூயார்க்கில் கலைஞர்

விமான நிலையத்தில் வரவேற்பு

ஐ. நா. அவையைச் சுற்றிப் பார்த்தார்

நியூயார்க், நவ. 27—

நயாகரா நீர் வீழ்ச்சியைக் காண்பதற்குச் சென்றிருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அங்கிருந்து நேற்று நியூயார்க் வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்புமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது; நியூயார்க் நகரில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளும் -- இங்கு வாழும் இந்தியர்களும் திரளாகக் கூடியிருந்து வரவேற்றனர்.

பிறகு முதலமைச்சர், ஐக்கிய நாடுகள் அவையின் தலைமை நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டார்; பொதுச் சபை -- பாதுகாப்புச் சபை மற்றும் முக்கிய பகுதிகளை அவர் சுற்றிப்பார்த்தார்.

ஐ. நா. அவையில் உள்ள இந்தியத் தூதுக்குழுவைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஏ. எஸ். மணி, கலைஞரை அழைத்துச் சென்று ஒவ்வொரு பகுதியாகக் காட்டி விளக்கங்கள் அளித்தார்.

மாலையில் ஐ. நா. பொதுச்செயலாளரின் உதவியாளரான சி. வி. நரசிம்மன், முதலமைச்சர் கலைஞரைக் கௌரவிக்கும் வகையில், சிறப்பு வரவேற்பு -- விருந்து ஒன்று அளித்தார்; முக்கியப் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

நியூயார்க் பங்கு மார்க்கெட்டையும் முதலமைச்சர் பார்வையிட்டார்.

நியூயார்க் நகரில் கலைஞர் அவர்கள் மூன்று நாட்கள் தங்கியிருக்கிறார்.

இன்று அவருக்கு, நியூயார்க் நகரில் உள்ள தமிழர்கள் வரவேற்பு அளிக்கின்றனர்.

நியூயார்க் சுற்றுப்பயணம் முடிந்ததும், கலைஞர் அவர்கள், வாஷிங்டன் நகருக்குச் செல்கிறார்.

அலிப்பூர் சிறையில் நக்சல்பாரிகள் கலகம்

கல்கத்தா, நவ. 27—

தென் கல்கத்தாவில் அலிப்பூர் மத்திய சிறையில் நேற்று காலை நக்சல்பாரி கைதிகளுக்கும் -- வார்டர்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் 6 நக்சல்பாரி கைதிகள் கொல்லப்பட்டனர்; 35 வார்டர்கள் உட்பட 207 பேர் காயமடைந்தனர்.

சிறையில் உள்ள நக்சல்பாரிகளான கைதிகள் இரும்புக் கம்பிகளையும் -- கற்களையும் கொண்டு வார்டர்களைத் தாக்கினர்.

இந்தச் சண்டையில் மற்ற சில வகைக் கைதிகள் வார்டர்களுக்கு ஆதரவாக வந்து நக்சல்பாரிகளை எதிர்த்துச் சண்டையிட்டார்கள்; அவர்களில் சிலரும் காயமடைந்தார்கள்.

காயமடைந்தோரில் 8 நக்சல்பாரிகள் -- 2 வார்டர்கள் ஆகியோர் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

"கடந்த ஆண்டு இரஷ்யா ஒரு உருக்கு ஆலையை அமைத்துத்தர ஒப்பந்தம் செய்திருந்தது; இது அமைக்கவில்லையானால், சீனுவிடம் இந்த ஆலை அமைக்க உதவி கோரப் போகிறேன்" என்று யாகியா கான் கூறியிருக்கிறார்.

விடுதலை வீரர்கள் கடும் போர்

சில்ஹெட் பகுதி முற்றுகை -- பல பகுதிகளை மீட்டுவிட்டனர்

முஜிபுர் நகர் நவ. 27—

பாகிஸ்தான் இராணுவ ஆட்சி இந்தியாவுடன் போரில் ஈடுபடத் தயாராகிவரும் இந்நேரத்தில் வங்க தேசத்தில் விடுதலைப் படையினர் நாளும் வெற்றிகளைக் குவித்து வருகின்றனர்

இராணுவக் கண்டோன்மெண்டுகளான ஜெஸ்சூர் -- சில்ஹெட் பகுதிகளை விடுதலைப் படையினர் முற்றுகையிட்டிருக்கின்றனர்.

இதன்றி, பல புதிய பகுதிகளும் விடுதலைப் படையின் ஆதிக்கத்தின்கீழ் வந்திருக்கின்றன.

51 இலட்சம் தரிசுநிலம்

நிலமற்ற தொழிலாளருக்கு வழங்கப்பட்டிருக்கிறதாம்

புதுடில்லி, நவ. 26—

"பல்வேறு மாநிலங்களிலும் நிலமில்லாத தொழிலாளருக்கு இதுவரையில் 51 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில், வேளாண்மைத் துறை துணையமைச்சர் ஷிண்டே தெரிவித்தார்.

தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றோருக்கு நல்வாய்ப்பு

புதிய தொழில் தொடங்க அரசு கடனுதவி

சென்னை, நவ. 27—

தொழில் நுணுக்கப் பயிற்சியும் -- அனுபவமும் இருந்தும் சொந்தத்தில் சிறு தொழிற்கூடங்களைத் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லாதவர்கள் அத்தகைய சிறு தொழிற்கூடங்களைத் தொடங்குவதற்கு உதவி செய்வதற்கான புதிய திட்டம் ஒன்றினைத் தமிழ்நாட்டுத் தொழில் முதலீட்டுக் கழகம் தொடங்கியுள்ளது.

தகுதி பெற்ற பொறியாளர்களுக்கும் -- அத்தாட்சி இதழ்கள், நற்சான்றிதழ் பெற்றவர்களுக்கும் -- தாங்கள் தொடங்க விரும்பும் தொழில்களில் சிறப்பான அனுபவமும், தொழில் நுணுக்க அறிவும் மிக்கவர்களுக்கும் இந்த உதவி வழங்கப்படும்.

தனிநபர்களுக்கும், கூட்டு அமைப்புக்களுக்கும் மட்டுமே இந்த உதவி கிட்டும்; புதிய தொழில் நுணுக்கங்களைப் பயன்படுத்துகின்ற சிறு தொழில் பிரிவுகள் மட்டுமே இந்த உதவி பெறுவதற்குத் தகுதி உள்ளவையாகும்; தமிழக அரசின் தொழில் வர்த்தகத் துறை இயக்குநர் அலுவலகத்தில் சிறு தொழில் என்று பதிவு செய்யப்பட வேண்டும்.

உயர்ந்தபட்சம் ரூ. 2 இலட்சமும் -- குறைந்தபட்சம் ரூ. 10 ஆயிரமும் கடனாக வழங்கப்படும்; இந்தக் கடனை -- கடன் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் கழித்து, ஏழு ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம்; தற்போதைய வட்டி ஆண்டுக்கு 7 சதவிகிதமாகும்.

பிற விவரங்களுக்கு, 'செயலாளர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை-2' என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

ரொடீஷியாவிற்குச் சுதந்தரம்

நாளடைவில் கிடைப்பதற்கான திட்டம்

இலண்டன், நவ. 27—

ரொடீஷியாவில் பெரும்பான்மையினரான ஆப்பிரிக்கர்கள் ஆட்சி நடத்திட நாளாவட்டத்தில் வழிவகுக்கக்கூடிய ரொடீஷிய சுதந்தரத்திற்கான ஒரு திட்டத்தைப் பிரிட்டனும் -- ரொடீஷியாவும் அளித்தன.

ரொடீஷியா, ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாடு; அங்கு பெரும்பான்மையினரான ஆப்பிரிக்கர்களுக்குத் தற்போது ஆட்சி உரிமை இல்லை; சிறுபான்மையினரான வெள்ளையர்களுக்கே ஆட்சி உரிமை உள்ளது.

இப்போது அளிக்கப்பட்டிருக்கின்ற திட்டத்தின்படி, ஆப்பிரிக்கர்கள் மிக விரைவில் ஆட்சி உரிமையைப் பெற்றுவிடமாட்டார்கள்; இதற்கு வரையறுக்க முடியாத அளவுக்குக் காலம் ஆகக்கூடும் என்று தோன்றுகிறது.

நாணயங்களைப் பதுக்குவதை --- உருக்குவதைத் தடைசெய்யும் மசோதா

மக்களவையில் நிறைவேறியது

புதுடில்லி, நவ. 25—

சில்லறை நாணயங்களை உருக்குவதையும் -- அவற்றை உருக்கும் நோக்கத்துடன் பதுக்குவதையும் சட்டப்படி குற்றம் என வகை செய்யும் மசோதாவை மக்களவை நிறைவேற்றியது.

சென்ற மாதம் இதுதொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இம்மசோதா கொண்டு வரப்பட்டது.

தற்காலிக அடிப்படையில், இம்மசோதா மூன்று ஆண்டுகள் மட்டுமே செல்லுபடியாவதாக இருக்கும்.

இராஜஸ்தான் பல்கலைக்கழகம் மூடப்பட்டது

ஜெய்ப்பூர், நவ. 26—

இராஜஸ்தான் பல்கலைக்கழகம் காலவரம்பின்றி மூடப்பட்டது.

பல்வேறு கல்லூரிகளில் மாணவர்கள் அடிக்கடி வேலைநிறுத்தம் செய்வதால் பல்கலைக்கழகப் பணிகளில் தடங்கல் ஏற்பட்டுவிட்டதே காரணம் எனக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக நிர்வாகிகள் --- ஆசிரியர்கள் ஆகியோரிடம் மாணவர்கள் வல்செயல்களைக் கையாள்வதாலும், பல்கலைக்கழக உடைமைகளுக்கு மாணவர்கள் விரிவான சேதம் ஏற்படுத்தியதாலும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிப்பு ஒன்று கூறியது.

முதலமைச்சர்களின் கருத்து கோரப்பட்டிருக்கிறதாம்

புதுடில்லி நவ. 26—

"கட்சித் தாவல்களைத் தடுப்பதற்கான சட்டம் குறித்து மாநில முதலமைச்சர்களின் கருத்து கோரப்பட்டிருக்கிறது; அதற்கு இன்னும் சிலரிடமிருந்து பதில் வரவேண்டியிருக்கிறது"

என்று மக்களவையில், உள்துறை துணையமைச்சர் மோசின் தெரிவித்தார்.

'சந்தேகிப்பதற்கு இடமில்லை' என்கிறார் மத்திய அமைச்சர்

புதுடில்லி, நவ. 26—

"முன்னாள் பஞ்சாப் அமைச்சர் டாக்டர் ஜசுஜீத் சிங், பிரிட்டனில், இந்தியாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதற்குப் பாகிஸ்தான் பண உதவி செய்கிறதா?"

என்று, மக்களவையில் உறுப்பினர்கள் கேட்டனர்.

"அப்படிச் சந்தேகிப்பதற்குக் காரணம் இல்லை" என்று உள்துறைத் துணை அமைச்சர் மோசின் கூறினார்.

இலவசக் கல்வியின் பலன்

அமைச்சர் அன்பழகன் கருத்து

தஞ்சை, நவ. 27—

"முதல் வகுப்பு முதல் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு வரையில் இருந்துவரும் இலவசக் கல்வியின் பலாபலன் குறித்து மறு பரிசீலனை அவசியம்"

என்று மக்கள் நல வாழ்வு அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இங்கு கூறினார்.

இங்குள்ள அரசினர் கலைக் கல்லூரியில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"சமூகத்திலுள்ள ஏழைகளும்-- பின்னடைந்த மக்களும் முன்னேறுவதற்கு உதவும் நோக்கத்துடன் துவக்கத்தில் இலவசக் கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டது; இதில், வசதி படைத்த பகுதியினரும் நன்மையடைந்தனர்; ஆனால் அவர்கள், பின்னடைந்த மக்களின் கல்விக்காக உதவுவது பற்றி யோசித்துப் பார்க்கவில்லை.

"இலவசக் கல்வித் திட்டம், கல்வியை மிகவும் சாதாரணமாக்கிவிட்டது; இதனால் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் நிதிச் சுமையை மாணவர்களோ அல்லது பெற்றோர்களோ உணர்ந்ததாகத் தெரியவில்லை."

பாகிஸ்தான் விமானங்கட்குத் தடை

இலங்கை அரசு உறுதியான அறிவிப்பு

புதுடில்லி, நவ. 26—

"ஆயுதங்களும், போர்த் தளவாடங்களும் -- துருப்புக்களும் கொண்டு செல்லும் பாகிஸ்தான் விமானங்களைத் தன் வழியாகச் செல்ல இலங்கை அனுமதிக்காது என்று இலங்கை அரசு உறுதியளித்திருக்கிறது"

என்று மக்களவையில், வெளிவிவகாரத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங் தெரிவித்தார்.

"கொழும்பு வழியாகக் கிழக்கு வங்கத்துக்கு ஆயுதங்களை அல்லது துருப்புக்களைக் கொண்டு செல்லப் பாகிஸ்தானுக்கு வசதிகளை அளிக்க எந்த நேரத்திலும் இலங்கை முன்வரவில்லை"

என்று இலங்கைத் தற்காப்பு -- உள்துறை அமைச்சகம் உறுதி செய்தது.

"கிழக்கு வங்கத்துக்கு ஆயுதங்களை அல்லது துருப்புக்களைக் கொண்டு செல்லப் பாகிஸ்தானுக்குத் தரப்பட்ட வசதிகளை இலங்கை நிறுத்திவிட்டது என்று அந்த நாட்டு அரசு, இந்திய உள்துறை அமைச்சரிடம் உறுதி கூறியதாக சுவரண் சிங் குறிப்பிட்டார்" என்ற இலங்கைப் பத்திரிகைகளில் வெளியான தகவலைத் தொடர்ந்து அரசு மேற்கண்ட அறிக்கையை விடுத்தது.

இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் டிராக்டர்கள்

இலண்டன், நவ. 27—

இந்திய நிலத்திற்கு மிகவும் ஏற்ற -- நவீனமான 500 டிராக்டர்களை இந்திய அரசாங்கத்தின் வர்த்தகக் கார்ப்பரேஷன் பிரிட்டனிலிருந்து வாங்குகிறது. டிசம்பர் மாதத்திற்குள் இந்தியாவுக்கு வந்துவிடும் இந்த டிராக்டர்களின் மதிப்பு 7 இலட்சம் பவுன்கள்.

இந்தியாவில் நான்கு மாநிலங்களில் இந்த 500 டிராக்டர்களும் விநியோகிக்கப்படும்.

மணிக்கு 28 கிலோமீட்டர் செல்லக்கூடிய இந்த நவீன டிராக்டர்களில், எவ்வளவு ஆழம் உழ வேண்டும் என்று தீர்மானித்து -- அதற்கேற்ப இதனைப் பயன்படுத்தும் வசதி உள்ளது.

தவறான செய்திக்கு அரசு மறுப்பு

சென்னை, நவ. 26--

"தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிவதற்கு இதர மாநிலங்களைச் சேர்ந்த பல்கலைக் கழகங்களில் முதுநிலை (போஸ்டு கிராசுவேட்) பட்டம்பெற்றவர்களுக்குத் தகுதியுடையவர்கள் ஆவர்" என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுபற்றித் தமிழ்நாடு அரசு ஒரு செய்திக் குறிப்பை வெளியிட்டுள்ளது.

மாநிலங்களில் படித்தும் பட்டம் பெற்றவர்களைத் தமிழ்நாடு அரசினர் கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமிப்பதை தமிழ்நாடு அரசு தடை செய்துள்ளதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தியை அரசு மறுத்துள்ளது.

"இளநிலைப் பட்டம் (பேச்சலர் டிகிரி) பெற்றவர்கள்கூட முன்பு அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுவந்தனர்; இப்போது, முதுநிலைப் பட்டம் (போஸ்டு கிராசுவேட் டிகிரி) பெற்றவர்கள்தான் அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது; இதைத் தவிர, மற்ற மாநிலங்களில் படித்தவர்களுக்கு அரசு தடை ஏதும் விதிக்கவில்லை" என்று அந்தப் பத்திரிகைக் குறிப்பு விளக்கியது.

போர்ச் சூழ்நிலை ஏற்படவில்லை

ஐ. நா. தலைவர் கருத்து

கோலாலம்பூர், நவ. 6—

"இந்தியத் துணைக்கண்டத்தில் 'போர்ச் சூழ்நிலை' இருப்பதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன என்றாலும், எனக்கு அவ்வாறு தகவல் அளிக்கப்படவில்லை"

என்று ஐ.நா. பொதுப்பேரவைத் தலைவர் டாக்டர் ஆதம் மாலிக் கோலாலம்பூரில் கூறினார்.

"தற்போதைய நெருக்கடியில் ஐ.நா. தலையிட வேண்டும் என்று இந்தியாவும் -- பாகிஸ்தானும் கருதினால், இருநாடுகளும் இதற்காக அணுக வேண்டும் என்று இரு நாடுகளின் தூதர்களிடமும் கூறியிருக்கிறேன்" என்றும் அவர் சொன்னார்.

கருத்துக்களின் மூலம் மக்களை ஈர்ப்பவர் கலைஞர்

சிறந்த கவிஞராகவும் தலைவராகவும் திகழ இதுவே காரணம்

கவிதை நூல் வெளியீட்டு விழாவில் நாவலர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, நவ. 26—

"உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தத்தான் கலைகள் இருக்கின்றன; கருத்துக்களை வெளியிடும் மிகச் சிறந்த கருவியாக கலைகள் இருக்கின்றன!

"கலைஞர் தமது கவிதைகளில், சொல்லுக்குச் சொல் சுவையேற்றி இருக்கிறார்; பொருளுக்குப் பொருள் ஒளியேற்றி இருக்கிறார்!

"படிக்கப் படிக்கச் சுவை தருவதுதான் சிறந்த இலக்கியம்; அதைப்போல் சுவை தருகிறது இந்த நூல்!

"கவிதைக்கே உரிய உவமைகளையும், உருவகங்களையும், எதுகை மோனையையும் உரைநடையில் கொண்டுவந்த பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் -- கலைஞருக்கும் உண்டு!

"ஏழைமையைப் பார்த்து -- இருக்கின்ற நிலைமைகளையொட்டி -- வருங்காலத்திற்கு ஏற்றவற்றைச் சொல்பவன்தான் சிறந்த கவிஞனாவான் -- கலைஞனாவான்!

"தனது கருத்துக்களின் மூலம் மக்களைத் தன் பின்னாலே ஈர்த்துச் செல்கின்றவன்தான் சிறந்த கவிஞனாகவும்--தலைவனாகவும் இருக்க முடியும்; அந்த வகையில் கலைஞர் தமது கவிதைகள் மூலம் மக்களை ஈர்த்துச் செல்கிறார்"

என்று கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'கவியரங்கில் கலைஞர்' என்ற நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் கூறினார்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அவ்வப்போது கவியரங்கங்களில் பங்கு கொண்டு பாடிய கவிதைகளின் தொகுப்பு நூல், 'கவியரங்கில் கலைஞர்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

இந்த வெளியீட்டு விழா 25—11—71 அன்று மாலை கலைவாணர் அரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது.

விழாவுக்குச் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் தலைமையேற்றார்.

தோழர் தினகரன் வரவேற்புரை ஆற்றினார்.

கல்வியமைச்சர் நாவலர் அவர்கள், நூலை வெளியிட்டு -- முதல் நூலைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்களிடம் அளித்தார்.

விழாவில், கி. வா. செகநாதன், மால்கம் ஆதிசேசையா, கவிஞர் கண்ணதாசன், என். வி. நடராசன் ஆகியோரும் பேசினர்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதமா?

'இல்லை' என அமைச்சர் மறுப்பு

புதுடில்லி, நவ. 26—

"பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்கள் அனுப்பப்படுகின்றனவா?"

என்று நாடாளுமன்றத்தில் கேள்விகள் கேட்கப்பட்டன.

அமெரிக்கப் போர் ஆயுதங்கள் வியட்நாம் நாடு வழியாகப் பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகின்றன என்று முன்பு வெளியான செய்தியை அமெரிக்க அரசாங்கம் மறுத்தது அல்லவா? இதுபற்றி உறுப்பினர்கள் கேட்டார்கள்.

இதற்கு வெளிநாட்டு அமைச்சர் அமைச்சர் சுவரண் சிங் பதிலளிக்கையில், 'இதுபற்றி அரசாங்கம் நடத்திய விசாரணையில் ஆயுதம் அனுப்பப்பட்டதற்கான தகவல் எதுவும் இல்லை' என்று கூறினார்.

"அமெரிக்கா வெளியிட்ட மறுப்பில் அரசு திருப்தி அடைந்துவிட்டதா?" என்று சிந்தாமணி பாணிக்கிரகி கேட்டார்.

"உறுப்பினர்களின் திருப்தியே என்னுடைய திருப்தி" என்று அதற்கு அமைச்சர் பதிலளித்தார்.

"அமெரிக்கா ஆயுதம் அனுப்பியதாகச் செய்தி வெளியானதும், அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?" என்று ஓர் உறுப்பினர் கேட்டார்.

"அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதர் இந்தச் செய்தியை அமெரிக்க அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வந்தார்; அதற்கு அப்படி ஆயுதம் எதுவும் அனுப்பவில்லை என்று அமெரிக்கா அறிவித்தது" என்று அமைச்சர் கூறினார்.

பாகிஸ்தானியர்கட்குப் பயிற்சியளிக்க சீனர்கள்?

ஜாகர்த்த, நவ. 26—

"கொரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளில் பயிற்சி அளிப்பதற்காக சீனா 200 இராணுவப் பயிற்சியாளர்களைப் பாகிஸ்தானுக்கு அனுப்பியிருக்கிறது"

என்று இந்தோனேஷிய இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் ஆகஸ் மார்பாங் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் துருப்புகளுக்கு இவர்கள் கொரில்லா எதிர்ப்பு முறைகளைக் கற்றுக் கொடுத்து கொண்டிருக்கிறார்களாம்.

மேற்கு ஜாவாவில் கம்போடிய துருப்புகளுக்கு இந்தோனேஷியா இம்மாதிரி பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறது; அதில் தவறு ஒன்றுமில்லை என்று நிருபிப்பதற்காக அவர் இந்தச் சீன உதாரணத்தை எடுத்துக் காட்டினார்.

"நேச உறவுகள் உள்ள நாடுகள் தம்முடைய இராணுவ அதிகாரிகளை இம்மாதிரி பரிமாறிக் கொள்ளுவது இயல்புதான்" என்று அவர் சொன்னார்.

இந்தத் தகவல் தனக்கு எப்படி -- எங்கிருந்து கிடைத்தது என்ற விவரங்கள் எதையும் அவர் சொல்லவில்லை.

இங்குள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் இதைப் பற்றி விசாரித்த போது, அவர்கள் எதுவும் சொல்ல மறுத்துவிட்டனர்; 'இதைப் பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது' என்று மட்டும் சொன்னார்கள்.

அமெரிக்க அழகு நகரில் கலைஞர் யாத்த கவிதை

அமெரிக்க நாட்டில் குளிர் கடுமையாகும்போது, சூரிய ஒளி மிகுந்த மாநிலமான 'பிளாரிடா'வில், 'ஆர்லந்தோ' போன்ற பகுதிகளுக்கு மக்கள் சுற்றுலா செல்வது வழக்கம்; அந்தப் பகுதிக்கு நவ. 20-ந் தேதி பிற்பகல் முதலமைச்சர் கலைஞரும் -- அவரது குழுவினரும், அமெரிக்க அரசு அதிகாரிகளுடன் சென்றனர்; எழில் மிகுந்த ஏரிகளின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசித்தனர்.

ஆண்டொன்றுக்கு ரூ. 7 கோடிச் செலவில், விஞ்ஞானம் -- கலை -- அறிவு ஆகியவற்றை வளர்க்கும் அறிவு வளர்ச்சி விஞ்ஞானக் கலைக் கழகத்தின் சார்பில் நிதி திரட்டும் நிகழ்ச்சிக் கோவையின் தொடர்பாக 'ஆர்லந்தோ'வில் நடந்த முக்கிய விருந்து ஒன்றில் சிறப்பு விருந்தினராக முதலமைச்சர் கலைஞர் கலந்து கொண்டார்.

ஆதிகாலத்து அமெரிக்கர்கள் -- செவ்விந்தியர்கள் எந்த உடையில் இருந்தார்களோ அதே உடையில் விருந்துக்கு வந்திருந்த அனைவரும் காட்சியளித்தனர்; விருந்து நடந்த தோட்டமும் ஆதிகாலத்து சூழ்நிலையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் கலைஞர், தமிழ்நாட்டு வேட்டி -- சட்டை -- துண்டு அணிந்துகொண்டு அந்த விருந்தில் கலந்துகொண்டார்.

'ஆர்லந்தோ'வின் கண்ணைக் கவரும் ஏரியில் மிக அழகான நீரூற்று ஒன்றைக் கண்ட கலைஞர், உடனே அதுபற்றி ஒரு கவிதை எழுதினார்; அதுகண்டு வியந்த அறிவு விஞ்ஞானக் கழகக் கலையரங்கத் தலைவர், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அமெரிக்க ஏடு ஒன்றில் வெளியிட அனுமதி பெற்றுக் கொண்டார்!

ஆர்லந்தோ என்னும் நகரில் அரியதோர் ஏரியிலே
அழகிய மத்தாப்பூ ஊற்றொன்று கண்டேன்
ஒளிவிளக்குப் போடுகின்ற தாளத்திற்கு
ஒரு லயமும் பிசகாமல் ஆடுகின்ற
நீரூற்று ஆட்டக்காரி நாட்டியத்தின்
கீர்த்தியென்ன சொல்வேன்!
பசும்புல் தரைமீது பால் நிறத்துப்
பனிக்கட்டி உருள்வதுபோல் ஓர் காட்சி -- அதைப்
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
'படக்' என மாறிவிடும் மற்றோர் காட்சி
இப்படித்தான் இங்குள்ள 'அப்போலா' கிளம்பிற்றென்று
இருள்கிழித்து வானேறும் நீரின் கரங்கள்
பொற்கோல்லர் பட்டறையில் பொன்பரப்பும் மஞ்சள் ஒளி
விற்பட்ட அம்புபோல விர்ரென்று எழுந்து பாயும்!
கற்காலக் கொள்கை மனிதர் கடவுளர்கள் சந்நிதியில்
காவுக்கு ஓர் உயிரை வெட்டும்போது
பீறிட்டுக் கிளம்புகின்ற இரத்தம் போல்
சீறித்தான் தாவுதய்யோ சிவப்பு வண்ணம்!
மார்கழித் திருநாளில் நம்மூரில்
மங்கையர்கள் திருவாயில்
பாவிசித்துத் தத்தம் தெருவாயில் பறங்கிப்
பூவிரித்து வைக்கின்ற கோலம் போல்
கண்கொள்ளாக் காட்சி கண்டேன்!
நல்லவேளை -- தனியாக ரசிக்கின்ற வாய்ப்பெனக்கு
தப்பினேன் அதனாலே!
பெண்ணொருத்தி அருகிருந்தால் -- நீரூற்றின்
வண்ணத்தை கணக்கெடுத்து மறுநாளே
வகைக்கு ஒன்றாய் ஆடை கேட்பாள்!

ஆவலைத் தூண்டிடும் அளவற்ற பரிசுகள் உங்களுக்காகவே!

மொத்தப் பரிசுத் தொகை:

ரூ. 20,00,000 *

மொத்தப் பரிசுகள் 5331

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.

குலுக்கல் நாள்:
30-11-1971

முதல் சிறப்புப் பரிசு
ரூ. 2,50,000
(பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்)

வழக்கமான பரிசுகள் (ஒவ்வொரு வரிசைக்கும்)
ஒரு இரண்டாவது பரிசு ரூ. 1,00,000

5 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ.	50,000
10 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ.	50,000
50 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. ஆயிரம்	ரூ.	50,000
1000 ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. நூறு	ரூ.	1,00,000
	ரூ.	3,50,000

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள்: 258
வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, சென்னை-2
*5 வரிசைகள் வெளியீட்டுக்குரியது.

செலவு ஒரு ரூபாய்

வரவோ பல லட்ச ரூபாய்

மாஸ்கோ போவதன் மர்மம் என்ன?

இலங்கை அரசு ஐயம்

கொழும்பு, நவ. 26—

இலங்கையிலிருந்து பலர் மாஸ்கோவுக்குப் போவது இப்போது அதிகமாயிருக்கிறது; உடல் நிலையை முன்னிட்டு இவர்கள் போவதாகச் சொல்லப்படுகிறது; விமானப் பயணத்திற்கான கட்டணத்தை முன்னதாகவே மாஸ்கோ கொடுத்து விடுகிறது.

இதைப் பற்றி இலங்கை அரசு ஐயம் கொள்கிறது.

இனிமேல் இம்மாதிரி விமானப் பயணம் செய்பவர்கள், தாம் மாஸ்கோவுக்குப் போகவேண்டிய அவசியம் என்ன என்பதை அரசுக்குத் திருப்தி அளிக்கும் விதத்தில் விளக்கவேண்டும்.

'இலங்கையில் மருத்துவ உதவி கிடைக்கவில்லை' என்று டாக்டர்கள் சான்றிதழ் கொடுத்தால் தான் அவர்கள் மாஸ்கோ சென்று சிகிச்சை பெறலாம்.

தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதித்திட்டம்

சில மாநிலங்கள் உரிய கவனம் செலுத்தவில்லையாம்

புதுடில்லி, நவ. 26—

"தொழிலாளருக்கான குடியிருப்பு வசதித் திட்டங்களில் சில மாநிலங்கள் போதிய கவனம் செலுத்தவில்லை"

என்று மத்திய குடியிருப்பு வசதித் துறை துணையமைச்சர் குஜ்ரால் நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"குடியிருப்பு வசதித் திட்டங்களுக்கான முதலீட்டில் குறைந்தபட்சம் 8 சதவிகிதமாவது செலவிட வேண்டும் என்று மாநில அரசுகளுக்குக் கூறப்பட்டிருக்கிறது; ஆனால், இவ்வகையில் மிக அதிகமாகச் செலவிட்டிருப்பது 4 சதவிகிதம்தான்; பெரும்பாலான மாநிலங்கள், குடியிருப்பு வசதித் திட்டங்களுக்காக 1.50 அல்லது 2 சதவிகிதமே செலவிட்டிருக்கின்றன."

பின்தங்கிய பகுதிகளில் புதிய தொழில்கள்

அரசு உதவி பற்றிய அறிவிப்பு

சென்னை, நவ. 27—

இம்மாநிலத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் துவக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு 10 சதவிகித மானியம் அல்லது உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ் உதவி பெறுவதற்கான நடைமுறையை இந்திய அரசு அறிவித்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டத்தில் உள்ள துணை வட்டங்கள் உட்பட இராமநாதபுரம், முதுகுளத்தூர், சிவகங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர் ஆகிய வட்டங்களிலும்—

மதுரை மாவட்டத்தின் மேலூர் வட்டமும்—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருமயம், ஆலங்குடி, குளத்தூர் வட்டங்களும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாகும்.

இத்திட்டம், 1971 ஆகஸ்டு 26 முதல் செயலுக்கு வந்துள்ளது; நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் செயலில் இருக்கும்.

1—10—70-க்குப் பிறகு ஒரு தொழிற்சாலை நிறுவ தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் அந்த நிறுவனம் உதவித் தொகை பெறத் தகுதியுள்ளதாகிறது.

ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரையில், அவை, தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் அவற்றின் கிளைகளைத் துவங்க 1-10-70-க்கு முன்னதாக தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பின் அவையும் உதவித் தொகை பெறத் தகுதியுள்ளதாகிறது.

ஏற்கனவே இப்பகுதிகளில்உள்ள நிறுவனங்கள் அவற்றின் நிரந்தர முதலீட்டினை 25 சதவிகிதத்திற்குக் குறையாமல் அதிகரித்திருப்பின் அவை போதுமான விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டதாகக் கருதப்படும்.

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்குத் தேவையான முதலீட்டில் 60 சதவிகிதம் செலுத்தப்பட்டிருந்தால் அல்லது அதற்குத் தேவையான பெரும் பகுதி இயந்திரச் சாதனங்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், அது, தகுந்த நடவடிக்கை' எடுத்துள்ளதாகக் கருதப்படும்.

இத்திட்டத்தின்கீழ் உதவி பெற விரும்பும் எல்லா நிறுவனங்களும் 31-12-1971-க்குள் தொழில் துறை அரசுச் செயலாளரிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

மாநிலப் பிரதிநிதிகள், மையத் தொழில் வளர்ச்சி அமைச்சகப் பிரதிநிதி ஒருவரும் அவரோடு அல்லது சம்பந்தப்பட்ட நிதி நிறுவன பிரதிநிதி ஒருவரும் அடங்கிய குழு ஒன்று மானியம் அல்லது உதவி வழங்குமுன் உதவி பெற விழையும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தனித்தனியாகப் பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

இதுபற்றி மேற்கொண்டு தகவல்கள் வேண்டுமானால் தொழில் துறை இணைச் செயலாளரை அணுகலாம்.

கராச்சி வரும் கப்பல்கள்--- பாகிஸ்தான் அரசு உத்தரவு

கராச்சி, நவ. 26—

கராச்சிக்கு வரும் கப்பல்கள், இருட்டிய பிறகு துறைமுகத்தை நோக்கி வரவேண்டாம என்றும், துறைமுகத்திலிருந்து 75 மைல்களுக்கு அப்பாலேயே இருக்கலாம் என்றும் பாகிஸ்தான் அரசு தெரிவித்திருக்கிறது.

உலக நாடுகளுக்கெல்லாம் ஓர் அறைகூவல்

வங்க தேசத்தில் மனித உரிமையை நிலைநாட்டத் தவறியதன் விளைவு

குடியரசுத் தலைவர் வி.வி. கிரி எச்சரிக்கை

புதுடில்லி, நவ, 27—

"உலகத்தின் கருத்துக்கும் பல்வேறு நாட்டு அரசுகளின் தலைமைப் பதவியை ஏற்றுள்ளவர்களுக்கும் இன்று பாகிஸ்தானில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஓர் அறைகூவலாக இருக்கின்றன; அவர்கள் தங்கள் தங்கள் நாட்டு நலனை மட்டும் கவனிப்பதுடன் நில்லாமல் அதற்கு அப்பாலும் சென்று இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும்.

"கிழக்கு வங்கத்தில் மக்களுக்கு நேர்ந்துள்ள அவலநிலை, மனித உரிமைகளையும் தர்மத்தையும் பாதுகாக்க உலக சமுதாயம் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறியதால் ஏற்பட்ட பரிதாப விளைவாக முடியும்"

என்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், கவர்னர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"கிழக்கு வங்காளத்தில் உள்ள மக்கள் அனைவரின் மீதும் இராணுவ ஆட்சியாளர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டனர்; சுமார் ஒரு கோடிப் பேர் இந்தியாவில் புகலிடம் தேடுமாறு செய்தனர்; இப்போது நமது எல்லையில், 'போர் முழக்கம்' செய்கிறார்கள்.

"பாகிஸ்தானுக்கு உண்மையான நட்பு நாடு ஏதாவது இருந்தால், முஜிபுர் ரகிமானையும் — சனநாயகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் விடுதலை செய்து, அவர்களுடன் ஒரு சமரசமான தீர்வு காண்பதே இந்தப் பிரச்சினை தீருவதற்கு ஒரே வழி என்பதைப் பாகிஸ்தானில் உள்ள இராணுவ ஆட்சியாளர்களுக்கு அது எடுத்துக்கூற வேண்டும்.

"நாமாகச் சென்று இந்தப் பிரச்சினையில் சிக்கிக்கொள்ளவில்லை; பாகிஸ்தான்தான் இந்தியாவுக்கு விரோதமான போக்கைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறது; பாகிஸ்தான் மக்கள்மீது இப்போது நமக்குச் சண்டை கிடையாது.

ஒரு நிலையான — அமைதியான சகாப்தம் இந்தியாவில் உதயமாக இருந்த நேரத்தில் பாகிஸ்தானில் உள்ள இராணுவ ஆட்சியாளர்களால் இந்தப் புதிய நிலைமை ஏற்பட்டிருப்பது விந்தையே; ஆனாலும் நம்முடைய எல்லை மீறப்பட்டாலன்றி நாம் ஆத்திரமடைந்து போரில் ஈடுபடமாட்டோம்; பாகிஸ்தானுடைய சேபர் ஜெட் விமானங்கள் நம்முடைய சிறிய 'நாட்' விமானங்களால் வீழ்த்தப்பட்டது பாகிஸ்தானுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும்.

இன்று இந்தியாவில் கடைசி மனிதர்வரை எல்லோரும் ஒரே அணியில் இருக்கிறார்கள்."

தமிழகத்தில் பஸ்கள் தேசியமயத் திட்டம்

நாடாளுமன்றத்தில் அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 27—

"தமிழ்நாட்டில் பஸ் போக்குவரத்து வசதிகள் தேசியமயமாக்கப்பட்டுவருகின்றன"

என்று மக்களவையில், அமைச்சர் இராஜ்பகதூர், கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாடு அரசால் ஐம்பது பஸ்களும் — அதற்கு மேலும் உள்ள போக்குவரத்துப் பஸ் நிறுவனங்களைத் தேசியமயமாக்குவதற்கான சட்டம் ஒன்று கடந்த ஜுன் 19-ம் நாளன்று இயற்றப்பட்டது."

தேனி அரசினர்

மருத்துவமனைத் திறப்பு விழா

தேனி அரசினர் மருத்துவமனையை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைப்பார்கள்; 29—11—71 காலை 10 மணிக்கு இவ்விழா திரு. பி.டி. ஆர். பழனிவேல்ராசன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்.

விடுதலைவீரர்கள் தலைக்கு விலை வைக்கிறது பாகிஸ்தான்

'போர் மூளும்' என்று அச்சம்

பண்டங்கள் விலையேற்றத்தால் மக்கள் அவதி

புதுடில்லி, நவ, 26—

மேற்குப் பாகிஸ்தானில் 'இன்றியமையாப் பண்டங்கள் எங்கே கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்துடன் மக்கள் அவற்றை வாங்கிக் குவிக்கிறார்கள்; அரிசி, சர்க்கரை, ஆகியவற்றின் விலைகள் 50 சதவிகிதம் ஏறிவிட்டன.

வங்காள தேசத்தைச் சேர்ந்த டாக்காவில், வெடிகுண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன; டாக்கா நகருக்கு அருகில் உள்ள இரு தொழிற்சாலைகளில் இரண்டு சம்பவங்கள் நடந்தன; டாக்கா நகரில் அடிக்கடி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மீண்டும் வேலைக்கு திரும்புமாறு அழைக்கப்படுகிறார்கள்; அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது; ஆங்காங்கு பதுங்கு குழிகள் வெட்டப்படுகின்றன; எல்லைப் பகுதிகளில் வெளிநாட்டவர் வெளியேற்றப்படுகிறார்கள்; இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக மக்கள் பீதியடைந்திருக்கிறார்கள்!

அவசர நிலைப் பிரகடனம் செய்துள்ளதைத் தொடர்ந்து, அதிபர் யாகியா கான் மேலும் விரிவான அதிகாரங்களை மேற்கொள்ளக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பண்டங்களுக்கு அதிக விலைகள் விதிக்கக்கூடாது என்று வர்த்தகர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்; ஆனால் இந்த எச்சரிக்கைக்குப் பலன் இருப்பதாகத் தெரியவில்லை. பண்டங்களின் விலைகள் உயர்த்தபடியே உள்ளன; உதாரணமாக, மண்ணெண்ணெய் ஒரு காலன் ரூ. 5-க்கு விற்கிறது. (சாதாரணமாக ஒரு காலன் மண்ணெண்ணெய் ஒரு ரூபாய்க்கு விற்கப்படுவது வழக்கம்.)

'விடுதலைப் படை வீரர்களை, 'விஷமிகள்' என்று யாகியா கான்—அரசாங்கம் விவரிக்கிறது; 'விஷமி'களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அல்லது அவர்களைப் பற்றிய தகவல்களை தருபவர்களுக்கு ரூ. 10 ஆயிரம் வரையில் பரிசு தருவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறதாம்.

பொருளாதார நிலவரம்

அமைச்சரவைக் குழு பரிசீலனை

புதுடில்லி, நவ. 27—

மத்திய அமைச்சரவையின் பொருளாதாரப் பிரச்சினைக் குழு விலைவாசிகள் உயர்வு உட்படப் பொருளாதார நிலவரங்கள் பற்றிப் பரிசீலனை செய்தது.

அமைச்சர் என். வி. நடராசன் அவர்களின் 60-வது பிறந்த நாள் விழா

29--11--71 மாலை 6-மணிக்கு

பெத்தநாய்க்கன்பேட்டை சிவஞானம் பூங்கா அருகில் (28-வது வட்டம்)

தலைவர்: ஜி. இராதாகிருஷ்ணன்

பேசுவோர்:

தந்தை பெரியார் — நாவலர் நெடுஞ்செழியன்

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.

மா. கி. தசரதன்

திருப்பத்தூர் இராமமூர்த்தி

துரை முருகன் எம்.எல்.ஏ.

எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.

அடிசன் தகராறு

தொழில் டிரிபியூனலுக்கு விடப்பட்டது

சென்னை, நவ 27—

1970—71-ம் ஆண்டு போனசு விகிதம் — பஞ்சப்படி ஆகியவை சம்பந்தமாக அடிசன் அண்டு கம்பெனியின் நிர்வாகத்தினருக்கும் — ஊழியர்களுக்கும் இடையேயான தகராறு, தொழில் டிரிபியூனலிடம் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது.

எனவே, அந்தக் கம்பெனியில் கதவடைப்பையோ — வேலைநிறுத்தத்தையோ தொடருவதற்குத் தமிழ்நாடு அரசு தடை விதித்துள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை குறிப்பு இதைத் தெரிவித்தது.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

29--11--71

சின்னமனூர்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு சங்கிலியார் திடலில்; தலைவர்: பழனிவேல்ராசன் எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், பி.எஸ். செல்லத்துரை, வ. தம்பித்துரை, எஸ். வேல்சாமி

விருதுநகர்

தி.மு.க. இளைஞர் பேரவை சார்பில் மாலை 7 மணிக்கு அம்மன் கோவில் திடலில்; தலைவர்: கோடங்கி இலட்சுமணன்; பேசுவோர்: விருதை ஜெயராஜ் கே. பி.எஸ். பாண்டியன், என்.கே. இராசமாணிக்கம், சி. பொன்னுசாமி எம்.சி., வி.எம்.டி. ஜலால், ப. பெரியசாமி, ந. இலட்சுமணன், எஸ். அப்பாவு சுப்பிரமணியன், அ. சங்கரலிங்கம்.

நலவாழ்வுத் துறை அமைச்சர்

க. அன்பழகன்

நிகழ்ச்சிகள்

நவ. 28 காலை 9 மணி: கரூர்—நகரமன்ற வரவேற்பு; 10-மணி: கரூர்—திருமணம்; 11-30 மணி: கரூர்—நகர கூட்டுறவு வங்கி சார்பில் வரவேற்பு; மாலை 3-மணி: கோபி — சீதாலட்சுமி மருத்துவமனையைத் திறந்துவைத்தல்; 6-மணி: கரூர்—பகுத்தறிவாளர் கழகச் சார்பில் வரவேற்பு; இரவு 7-மணி: கரூர்—பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 29 காலை 10-மணி: தேனி அரசினர் மருத்துவமனையைத் திறந்துவைத்தல்; மாலை 3 மணி: வீரபாண்டி—குடும்ப நலத் துணைக் கட்டடத் திறப்பு; 5-30 மணி: சின்னமனூர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு — குடும்ப நலத் துணைக் கட்டடத் திறப்பு; இரவு 7-மணி: சின்னமனூர்—பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 30, டிச. 1: தஞ்சை.

அறநிலைய அமைச்சர்

எம். கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

நவ. 28 காலை: மதுரை—கூடலழகர் திருக்கோயில் பார்வையிடல்; 10-மணி: மதுரை—பால் பண்ணை பார்வையிடல்; மாலை 3-மணி: விருதுநகர்—கூட்டுறவுப் பால் வழங்கு சங்கத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் தலைமை தாங்குதல்; 5-30 மணி: விருதுநகர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 6-மணி: விருதுநகரிலிருந்து கார் மூலம் பொள்ளாச்சி பயணம்.

நவ. 29: பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களுடன் உடுமலைத் தொகுதி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுதல்.

நவ. 30 காலை 9-மணி: இராமேசுவரம் 'இராமலிங்க இல்லம்' திருக்கோயில் பயணிகள் விடுதியைத் திறந்துவைத்தல்; 9-30 மணி: பர்வதவர்த்தினி அம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கான கால்கோள் இடுதல்; மாலை 4-மணி: இராமநாதபுரம்—நகரமன்ற வரவேற்பு.

டிச. 1 காலை 10-மணி: மதுரை—கிராமதான கிராமங்களைப் பார்வையிடுதல்; மாலை 3-மணி: பூதான வாரியக் கூட்டம்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

நிகழ்ச்சிகள்

நவ. 29: காலை 7 மணி: திருச்சி—தனலட்சுமி ஆலைத் திறப்பு; 9 மணி: தஞ்சை—கீரமங்கலம் கலையரங்கம் திறப்பு; மாலை 4 மணி: சூரம்பட்டி கிராமம் மின் விளக்கு ஏற்று விழா — ஊராட்சி வரவேற்பு; 5 மணி: தும்பலம் ஊராட்சி வரவேற்பு—கிராம மின் விளக்கு ஏற்றுவிழா — மேல்மட்ட நீர்த் தொட்டி திறப்பு — சீரணிப் பள்ளிக் கட்டடத் திறப்பு — படத் திறப்பு விழா; இரவு 7-மணி: தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றிய வரவேற்பு — அண்ணா மன்ற கட்டடத் திறப்பு; 8-மணி: மேட்டுப்பாளையம்—பொதுக்கூட்டம் — பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 30 காலை 10 மணி: ஆலம்பாடி—மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி திறப்பு; 11 மணி: குறும்பலூர் — அரசினர் உயர்நிலைப் பள்ளி விஞ்ஞான ஆய்வுக்கூடம் திறப்பு: 12 மணி: அம்மாபாளையம் — அரசினர் உயர்நிலைப் பள்ளி துணைக் கட்டடத் திறப்பு; மாலை 5-மணி: நூத்தப்பூர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிதிறப்பு; 6-மணி: வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; இரவு 7-மணி: பெரம்பலூர்—பொதுமக்கள் வரவேற்பு.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன்

நிகழ்ச்சிகள்

நவ. 28 இரவு 7-மணி: ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் — அரியலூர் துவக்கப் பள்ளி அடிக்கல் நாட்டு விழா; 7-30 மணி: ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம்—ரெட்டியார்பாளையம் (வாணாபுரம் ஊராட்சி) மின்விளக்கு நிறைவு விழா; 8 மணி: ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு; 8-30 மணி: ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் தொலைபேசி நிலையத் துவக்கவிழா.

நவ. 29 காலை 9மணி: கொடைக்கானல் ரோடு—பட்டா வழங்குதல்; 10-30 மணி: திருமணப்பட்டி—மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி திறப்பு; 11-30 மணி: சின்னாளப்பட்டி — நெசவாளர் குடியிருப்பு காலனிக்கு அடிக்கல் நாட்டு விழா.

நவ. 30 காலை 9-30மணி: மதுரை—'தொழிற்சங்கங்களும் தேசியப் பாதுகாப்பும்' — வட்டாரக் கருத்தரங்கு; 11-மணி: திருமோகூர்—மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு; மாலை 4-மணி: ரங்கராசபுரம்—மதுரைகிழக்கு ஊராட்சி ஒன்றியம் தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; இரவு 7-மணி: சமயநல்லூர்—மதுரை வடக்கு—தெற்கு வட்டங்கள் — அனைத்துக் கிராமங்கள் மின் இணைப்பு நிறைவு விழா.

கழிவு நீர் இறைவை நிலையத் திறப்பு விழா

சென்னை 114-வது கோட்டம் பாளையக்காரன் தெருவிலுள்ள கழிவு நீர் இறைக்கும் நிலையத்தை, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கி வைப்பார்; இவ்விழா 28—11—71 மாலை 6 மணிக்கு மேயர் சா. கணேசன் தலைமையிலும்—திரு. வி. பி. அகிலன் முன்னிலையிலும் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] (24, [illegible] சென்னை-[illegible]) [illegible] வெளியிடப்படுகிறது.